# பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
## ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
## Chief Secretary's Secretariat, Northern Provincial Council

### பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்
### නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය - පරිපාලන
### Office of the Deputy Chief Secretary - Administration

மாகாண சபை வளாகம் | පළාත් සභාව සංකීර්ණය, | Council Complex
A9 வீதி, கைதடி | A9 පාර" කෛතඩි | A9 Road, Kaithady


எனது இல / මගේ අංකය / My No } NP/02/14/GN/38/2026 Date: 2025.09.15

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
செயலாளர் பேரவைச் செயலகம்,
அமைச்சுச் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்
வடக்கு மாகாணம்

**<u>வடக்கு மாகாண சபையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் - 2026</u>**

மேற்படி விடயம் தொடர்பானது,

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில், 2026 ஆம் ஆண்டிற்கான இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் இடமாற்றச் சபையினால் பரிசீலிக்கப்பட்டு சிபார்சு செய்யப்பட்ட உத்தேச வருடாந்த இடமாற்றப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்விடமாற்றமானது, **2026.01.01** ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் இவ்விடமாற்றம் தொடர்பிலான மீளாய்வுகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி **2025.09.30** ஆகும் என்பதையும் இத்தால் அறியத்தருவதுடன் காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் மீளாய்வுக் கோரிக்கைகள் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

காகிதாதிகளின் செலவினங்களை குறைக்கும் வகையில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு குறித்த இடமாற்றப்பட்டியலின் வன்பிரதி (Hard Copy) அனுப்பி வைக்கப்படமாட்டாது. எனவே, தங்கள் அமைச்சு / திணைக்களங்களிலும், அதன் கீழ்வரும் சகல அலுவலகங்கள், உபஅலுவலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட இடமாற்ற பட்டியலை பதிவிறக்கம் செய்து இடமாற்றக்கட்டளைகள் தொடர்பில் அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இணைந்த சேவைப் பதவியணிகளுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான இவ்விடமாற்றத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான பூரண ஒத்துழைப்பானது தங்கள் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

***குறிப்பு:*** 2022, 2023, 2024, மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளின் இடமாற்றக்கட்டளைகள் தொடர்பில் எமது NP/02/14/GN/38/2025 இலக்க 2025.05.16 ஆம் திகதிய கடிதம் ஏற்புடையதாகும்.

*எ.அன்ரன் யோகநாயகம்*
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்,
வடக்கு மாகாணம்.

எ.அன்ரன் யோகநாயகம்
பிரதிப் பிரதம செயலாளர்
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாக
வடக்கு மாகாணம்


பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary } Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary } Tel : 021 223 2351 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 E-mail :ppas.np@gmail.com